44-57

# தமிழ் நதி

## பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள்

பதிப்பாசிரியர்கள்

மருத்துவர் **வி.பி. ரிஷிகேசன்**

முனைவர் **கலை. இராம. வெங்கடேசன்**

முனைவர் **மு. இராஜேந்திரன்**

**ஜெ. இராதாகிருஷ்ணன்**

SANKARAM
LOKA SANKARAM
SP
Sankara Publications

**சங்கரா பதிப்பகம்**

ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561. ☎ 044 - 27264066

| | |
|---|---|
| தமிழ் நதி | THAMIZ NATHI |
| பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகள் | International Research Seminor Articles |
| பதிப்பாசிரியர்கள் | Editors by |
| மருத்துவர் வி.பி. ரிஷிகேசன் | Dr. V.P. Rishikesan |
| முனைவர் கலை. இராம. வெங்கடேசன் | Dr. K.R. Venkatesan |
| முனைவர் மு. இராஜேந்திரன் | Dr. M. Rajendiran |
| ஜெ. இராதாகிருஷ்ணன் | J. Radhakrishnan |
| முதல் பதிப்பு: 26.10.2018 | First Edition: 26.10. 2018 |
| பக்கங்கள்: 640 | Pages: 640 |
| விலை: ₹ 500 | Price: ₹ 500 |
| அளவு: 1/8 டெம்மி | Size: 1/8 Demmy |
| *வடிவமைப்பு* | Layout |
| கன்னிக்கோவில் இராஜா | Kannikovil Raja |
| *அச்சாக்கம்* | Printed by |
| கேபிடல் இம்பர்சன், | Capital Impression, |
| சென்னை 600 014 | Chennai 600 014. |

**ISBN 978-81-938808-5-2**

**SANKARA PUBLICATIONS**
Sri Sankara Arts & Science College (Autonomous)
Enathur, Kancheepuram - 631561
Phone : 044 - 27264066 Fax : 044 - 27264066
Email : sankara1college@rediffmail.com Website : sankaracollege.edu.in

# வட இலங்கையின் ஆக்ககாலம் : ஆறுகளையும், குளங்களையும் அடிப்படையாகக் கொண்ட தொல்லியல் ஆய்வு

**திருமதி. சிவரூபி சயிதரன்**
தொல்லியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை
sivaruby17@gmail.com.

உலக நாகரிகங்கள் மற்றும் பண்பாட்டின் தோற்றமானது புவியியல் அமைவிற்;கேற்ப நதிக்கரையோரங்கள், ஆறுகள், குளங்கள், இலகுவாக நீரைப்பெறக் கூடிய இடங்களினை அண்மித்தே காணப்பட்டன. நாகரிக உருவாக்கம் என்பது பின்வரும் அம்சங்களினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1. மனிதன் நாடோடி வாழ்க்கை முறையினை கைவிட்டு நிரந்தரமான வாழ்க்கை முறைக்கு பொருத்தமான இடங்களில் நிரந்தர குடியிருப்புக்களை அமைத்து ஒரு சமூகமாக செறிந்து வாழத் தொடங்குதல் 2. தமது இருப்பிடங்களுக்கு அண்மையில் குளநீர்ப்பாசன விவசாயம், மந்தைவளர்ப்பு போன்ற நிரந்தர பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுதல் 3. சிறுதொழில் நுட்ப வளர்ச்சி 4. ஈமச்சின்னங்களை அமைத்தல் 5. மட்பாண்டங்களின் உற்பத்தி 6. உலோகத் தொழில்நுட்பம் 7. உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் 8. நகரமயமாக்கல் 9. எழுத்தின் தோற்றம் 10. அரச உருவாக்கம். இவ்அம்சங்களினை அளவீடாக கொண்டே நாகரிகங்கள் தோற்றம் பெற்றிருந்தன. உலகில் இந்த மாற்றங்கள் வெவ்வேறு பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் தமிழகத்திலும், இலங்கையிலும் இப்பண்பாட்டு மாற்றம் பெருங்கற்காலப் பண்பாடு (ஆநபயடவீவாவீஉ ஊரடவரசந) என அழைக்கப்படுகின்றது.

இப்பண்பாட்டில் பெரிய பெரிய கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கான ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டமையால் பெருங்கற்காலம் எனப் பெயர் பெற்றுள்ளது. மேலும் கறுப்பு சிவப்பு நிற

மட்பாண்டங்களின் அதிகரித்த பாவனை மற்றும் இரும்பாயுதங்களின் பாவனை போன்றவை காரணமாக கறுப்புசிவப்பு நிற மட்பாண்ட காலம் மற்றும் இரும்புக்காலம் எனவும் பெயர் பெறுகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய அம்சங்கள் பிற்கால பண்பாடுகளுக்கு அடிப்படையாகவும், வரலாற்றுக்காலம் தோற்றம் பெறுவதற்கு முன்னோடியாகவும் அமைந்தமையால் ஆக்ககாலம், வரலாற்று உதயகாலம் என்றும் அழைக்கப்படுகின்றது. இதுவரை கிடைக்கப் பெற்ற சான்றாதாரங்களின் அடிப்படையில் பெருங்கற்காலப் பண்பாடனது தென்னிந்தியாவில் கி.மு 1200 தொடக்கம் கி.மு 300 வரையிலும், இலங்கையில் கி.மு 1000 தொடக்கம் கி.மு 300 வரையிலும் நிலவியிருந்தது. தொல்லியாளர்களின் கருத்துப்படி இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டின் தோற்றமானது தென்னிந்திய பெருங்கற்காலப் பண்பாட்டுடனேயே தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றது. இப்பண்பாடு தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பரவிய அதேநேரம் தமக்கேயுரிய தனித்துவம் கொண்டு வளர்ந்ததனை இலங்கைக்குரிய பெருங்கற்கால பண்பாட்டு மையங்களின் தொல்லியல் எச்சங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பெருங்கற்கால மையங்களுக்கு உதாரணங்களாக தமிழகத்தில் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கொற்கை, பெருமான்மலை, பாண்டிச்சேரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மாங்குடி, காரூர் போன்ற மையங்களை குறிப்பிட முடியும். இலங்கையில் 50க்கு மேற்பட்ட பெருங்கற்கால மையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் அநுராதபுரம், பொம்பரிப்பு, கரம்பன்குளம், கதிரவெளி;, திசமகாரம, கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம், மாமடுவ, இபன்கட்டுவ, கிளிநொச்சி, ஆனைக்கோட்டை, சந்திராந்தை போன்ற மையங்களை சில உதாரணங்களாக குறிப்பிட முடியும்.

வட இலங்கையின் பண்பாட்டு உருவாக்கம் அதன் புவியியல், அமைவிட செல்வாக்கிற்கு உட்பட்ட வகையிலேயே வளர்ந்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்திய கேந்திர முக்கியத்துவம் மற்றும் பாக்குநீரிணையால் பிரிக்கப்பட்டு தமிழகத்திற்கு மிக அண்மையில் அமைந்திருந்ததன் காரணமாக வட இலங்கையும், தமிழகமும் ஒரே பிராந்தியம் என கூறும் அளவிற்கு பண்பாட்டு ஒருமைத்தன்மை கொண்டு காணப்படுகின்றது. வட இலங்கையின் பண்பாட்டு உருவாக்கத்தில் அதன் பௌதீக அம்சங்களான தரைத்தோற்றம், காலநிலை, மண்வளம், வடக்கு, கிழக்கு, மேற்கு எல்லைகள் இந்தியப் பெருங்கடலாக அமைந்துள்ள தன்மை போன்றன முக்கிய பங்கினை வகிக்கின்றன. வட இலங்கையின் ஆறுகள் குடியிருப்பின் தோற்றத்திற்கும், விவசாய நடவடிக்கைகளுக்கும் சாதகமாக அமைந்தன. வடிகால் அமைப்பை பொறுத்த வரையில் வட இலங்கையின் ஆறுகள் பருவகால மழையினை நம்பியிருப்பன. இவ்வாறுகள் பெரும்பாலும் குளங்களுக்கு நீரையிட்டுச் செல்ல உதவுவதோடு ஆற்றுப் படுக்கையில்

வண்டல் மணலையும் விட்டுச் செல்வதனால் செழிப்பான இம் மண்வகை விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்றதாக காணப்படுகின்றது. ஆறுகள் மக்கள், பண்பாடுகள் கரையோரத்திலிருந்து உள்நோக்கி செல்லவும் காரணமாக அமைந்தன. இதனால்தான் இலங்கையின் ஆறுகளை மையமாக வைத்து புராதன குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றன. உதாரணமாக வழுக்கையாற்று கரையோரத்தில் உள்ள கந்தரோடை வரலாற்று உதயகாலத்தில் பிரதான குடியிருப்பு மையமாக காணப்பட்டதனை அங்கு பெறப்பட்ட தொல்லியல் சான்றுகள் எடுத்தியம்புகின்றன.

*1,012.01* ஹெ.ீனீ பரப்பளவினையுடைய யாழ்ப்பாணமானது வறண்ட காலநிலையினை கொண்ட பிரதேசமாகும். யாழ்ப்பாண தீபகற்பத்தின் மண் மற்றும் நீர்வளம் என்பன சுண்ணம்புக்கல் (Lime Stone) நிலவியல் தொடர்பானது. சில பகுதிகளில் பவள சுண்ணாம்புக் கற்பாறைகளும் (Coral Lime Stone) காணப்படுகின்றன. மயோசின் புவியியல் கால சுண்ணாம்புக் கற்களிலான நுண்ணிய பாறைகளும், சுண்ணாம்பு குகைகளும், குடைவுகளும் நிலத்தடி நீரை சேமிப்பதற்கான திறனைக் கொண்டிருந்ததுடன், நிலத்தடி நீர் சேகரிப்பின் ஆதாரமாகவும் உள்ளன. இப்பாறைகளில் காணப்படும் நுண்ணிய துளைகளுடாக மழைநீர் இலகுவாக அகத்துறிஞ்சப்பட்டு நிலத்திற்கு கீழே சேமிக்கப்படுகின்றது. இப்பண்பு காரணமாகவே புராதன காலத்தில் இங்கு குடியிருப்புக்களை அமைத்த மக்கள் இலகுவான தொழிநுட்பத்தை பயன்படுத்தி கிணறுகள், குளங்களினை அமைத்து நிலக்கீழ் நீரினைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதனை தொல்லியல் ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. சாட்டி, வல்லிபுரம், மன்னார், முல்லைத்தீவு, பூநகரி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மண்வளைய கிணறுகள் ஆதிகால மக்கள் மணற்பாங்கான பிரதேசத்தில் தரைகீழ் நீரினை பெற்றதற்கு சிறந்த ஆதாரமாக அமைகின்றன. மேற்கூறப்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய தொல்லியல் சான்றுகளான கறுப்பு, சிவப்பு மட்பாண்டங்கள், இரும்பாயுதங்கள், எலும்பிலான கருவிகள் என்பன இப் பிரதேசங்கள் புவியியல் செல்வாக்கிற்கு உட்பட்ட மக்கள் குடியிருப்பு பிரதேசங்களாக வரலாற்று உதயகாலம் தொட்டு விளங்கின எனலாம்.

வட இலங்கை மூன்று பக்கமும் கடலால் சூழ்ந்துள்ளமையானது அதன் பண்பாட்டு வளர்ச்சியில் பெரும்பங்களிப்பினை வழங்கியுள்ளன. ஆதிகால மக்களின் பிரதான ஜறிவனோபாயமாக விவசாயம் காணப்பட்டாலும் கூட மீன்பிடி தொழிலும் இம் மக்களின் வாழ்வில் பெரும்பங்காற்றியுள்ளது. கரையோரம் சார்ந்த பிரதேசங்களில் இலகுவாக கடல் உணவைப் பெறக்கூடிய ஆழம் குறைந்த பரவைக்கடல், முருகைக் கற்பாறைகள் என்பன காணப்பட்டமை முக்கிய அம்சங்களாகும். இதனை வட இலங்கையின் கரையோரப் பிரதேசங்களான சாட்டி, ஆனைக்கோட்டை, சந்திராந்தை, கந்தரோடை, பூநகரி, மாந்தை ஆகிய இடங்களில் கிடைத்த மீன், சுறா,

நண்டு, சங்கு, சிப்பி போன்றவற்றின் எச்சங்கள் எடுத்துகாட்டுகின்றன. மற்றும் கல்முனை, பள்ளிக்குடா, வெட்டுக்காடு, மண்ணித்தலை போன்ற இடங்களில் பெருங்கற்கால பண்பாட்டம்சங்களுடன் காணப்பட்ட மீன்பிடி ஊசிகள், கத்திகள் என்பன வட இலங்கையின் கரையோரங்களில் புராதன மக்கள் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்தனர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. வட இலங்கையின் பிரதேசங்கள் பெரிதும் சமவெளிகளாகவும், மந்தை வளர்ப்பிற்கு ஏற்ற புல்நிலங்களை கொண்டிருப்பதாலும், இலகுவில் அழிக்கக் கூடிய சிறிய பற்றைக் காடுகள் கொண்டு காணப்படுவதாலும் இவ்விடங்களில் பண்டைய மனிதனால் இலகுவில் குடியேற முடிந்தது.

வட இலங்கையில் மாந்தை, ஐம்புகோளப்பட்டினம் போன்ற வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்தும் விதமான இயற்கைத் துறைமுகங்கள் காணப்பட்டமை இப்பிரதேச பண்பாட்டு வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றியிருந்தன. இந்தியா, கிரேக்க, உரோம, அரேபியா, தாய்லாந்து, யாவா, சுமத்திரா போன்ற நாட்டு வர்த்தகர்கள் வர்த்தக தொடர்புகளையும் ஏனைய பண்பாட்டு தொடர்புகளையும் ஏற்படுத்த காரணமாகியது. மாந்தை துறைமுகம் ஊடாக காலத்துக்கு காலம் வர்த்தகமும், மக்கள் புலப்பெயர்ச்சியும், பண்பாடும், அரசியல் படையெடுப்புக்களும் நடந்ததற்கு பல ஆதாரங்கள் உண்டு. மாந்தை துறைமுகத்திற்கு வடக்கே அமைந்த பூநகரியும் வர்த்தக பண்பாட்டு செல்வாக்கிற்கு பண்டைய காலத்தில் உட்பட்டிருக்கும் என கருத இடமுண்டு. இப்பிரதேசங்களில் கிடைக்கப்பெற்ற இந்தியா, சீனா, கிரேக்க, உரோம, அரேபிய நாடுகளுக்குரிய மட்பாண்டங்கள், நாணயங்கள் போன்ற தொல்பொருட் சான்றுகள் இதனை உறுதிசெய்கின்றன. இவ்வெளிநாட்டு வர்த்தகம் வரலாற்றுதயகால பண்பாட்டின் பின்னனியில் தோன்றிய நகரமயமாக்கத்திலும் செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளது.

வட இலங்கைக்கு இற்றைக்கு *2700* ஆண்டுகளுக்கு குறையாத தொன்மையான பண்பாட்டு வரலாறு உண்டு. இப்பண்பாட்டு வரலாறானது பெரிதும் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்தே நோக்கப்படுகின்றது. வரலாற்றுதய காலமாகிய பெருங்கற்கால பண்பாட்டிற்கு முன்னர் பழைய கற்கால பண்பாடு குறிப்பாக கி.மு *125000* ஆண்டிற்குரியதான மத்திய பழங்கற்கால பண்பாட்டிற்குரியதான கற்கருவிகள் இரணைமடுவிலும், கி.மு *37000* ஆண்டிலிருந்து இடைக்கற்காலப் பண்பாடு சிறப்புற்றிருந்ததனை மாதோட்டம், பூநகரி, இரணைமடு, புளியங்குளம், கட்டுக்கரைக்குளம் போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் எச்சங்கள் எடுத்துக்காட்டுகின்றன (Deraniyagala 1992, 2004, சிற்றம்பலம் *1993,* புஸ்பரட்ணம் *1993, 2017*). இவ்வாறு வட இலங்கையில் மத்திய பழையகற்கால, இடைக்கற்கால பண்பாட்டிற்குரிய எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் பெருங்கற்காலத்திலிருந்தே

தொடர்ச்சியானதொரு பண்பாட்டு மரபு உருவாகியிருந்தது. குறிப்பாக பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையிலான அம்சங்களின் வளர்ச்சியினை இற்றை வரை இனங்காண முடிவது சிறப்பான அம்சமாகும். தமிழக, இலங்கைத் தமிழ் மக்களிடையே இன்றும் நிலவுகின்ற கிரியை முறைகள், நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் சமூகப்பண்பாட்டு பழக்கவழக்கங்கள் என்பவற்றின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்கமாக பெருங்கற்காலப் பண்பாடே விளங்குகின்றது.

வட இலங்கையின் நுண்கற்கால, பெருங்கற்கால பண்பாட்டு உருவாக்கமானது ஆரம்பத்தில் இயற்கையான நீர்நிலைகள் சார்ந்த இடங்களில் தோற்றம் பெற்றிருந்தன. காலப்போக்கில் பெருங்கற்கால பண்பாட்டு மக்கள் நிரந்தர குடியிருப்புக்களை உருவாக்கி, நீர்ப்பாசன விவசாயத்தில் ஈடுபட தொடங்கிய போது இயற்கையான நீர்நிலைகளிடமிருந்து மட்டுமன்றி செயற்கையாக குளங்கள், கிணறுகளை அமைத்தும் தமது வாழ்வாதார, விவசாய தேவைகளுக்கான நீரினை பெற்றுக்கொண்டார்கள். இதனை பெருங்கற்கால பண்பாட்டு மையங்களை அண்டி காணப்படுகின்ற ஆறுகள், குளங்கள், சுடுமண் கிணறுகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்அம்சங்களினை பின்வரும் தொல்லியல் மையங்களுடாக கண்டு கொள்ள முடிகின்றது. இன்று இங்கு குறிப்பிடப்படும் குளங்கள் பல பிற்பட்ட கட்டுமான அடையாளத்தினை கொண்டிருப்பினும் அவற்றுக்கு நீண்ட பண்பாட்டு வரலாறு இருப்பதனை மறந்துவிடலாகாது.

*1. இரணைமடு:* கனகராயன் ஆறும், இரணைமடு குளமும் - வட இலங்கையின் பண்பாட்டு உருவாக்கத்தில் இரணைமடு பிரதேசம் (Iranamadu Formation) முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. பரற்கற்களிலான இரணைமடு புவிச்சரிதப் படையில் கி.மு *125000* க்குரிய மத்திய பழங்கற்கால பண்பாட்டிற்குரிய (Middle Paleoloith-ic) கற்கருவிகளும், மேற்படையில் கி.மு *37000* ஆண்டிற்குரியதான நுண்கற்கால பண்பாட்டிற்குரிய (Microlothic) குவாட்ஸ் கற்கருவிகளும் கிடைக்கப்பெற்றிருந்தன. இவ்வாறானதொரு பண்பாட்டு உருவாக்கத்திற்கு இரணைமடு குளமும், கனகராயன் ஆறும் முக்கிய பங்கு வகித்திருந்தது. *86* கிலோ மீற்றர் நீளத்தினை உடைய கனகராயன் ஆறு வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓமந்தையில் தொடங்கி முல்லைத் தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுடாக பாய்ந்து இரணைமடு குளத்திற்கான நீரை வழங்குவதில் பெரும் பங்கு வகிப்பதுடன், இறுதியில் சுண்டிக்குளம் உப்புநீர் ஏரியில் சென்று கலக்கின்றது. இரணைமடுக் குளத்தின் கட்டுமானம் பிற்பட்டதாக இருப்பினும் அக்குளம்சார் பிரசேத்திற்கு நீண்ட பண்பாட்டு வரலாறு இருப்பதனை தொல்லியல் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் இரணைமடுவின் அமைவிட முக்கியத்துவம், இயற்கையாக கிடைக்கப்பெற்ற ஆற்று நீர் போன்றவற்றின்

சாதக தன்மை காரணமாக இங்கு வாழத்தலைப்பட்டிருக்கலாம். மேலும் குளநீர்ப்பாசன விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு உருவாக்கத்திற்கும் இரணைமடு பிரதேசம் சாதகமாகவே அமைந்திருந்தது. இங்கு பழங்கற்கால கற்கருவிகள் கிடைக்கப் பெற்றிருந்த போதும் இதுவரை மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு தொடர்பான சான்றுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எதிர்காலத்தில் விரிவான ஆய்வுகள் இடம்பெறும் பட்சத்தில் இக்குறை நிவர்த்தி செய்யப்படலாம்.

2. கந்தரோடை : வழுக்கையாறும், குளங்களும் - யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு காலப்பகுதிக்குரிய தொல்லியல் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் கந்தரோடைக்கு தனிச்சிறப்புண்டு. கந்தரோடையில் வரலாற்றுதயகால, வரலாற்றுக்கால பண்பாடுகள் தோற்றம் பெறவும், செழித்து வளம் பெறுவதற்கும் இங்கு காணப்படும் பல குளங்களும், அதனூடாகப் பாயும் வழுக்கையாறும் முக்கிய பங்காற்றியிருந்தன. 16 கி.மீ நீளத்தினையுடைய வழுக்கையாறு மழைகாலத்தில் கந்தரோடையைக் கடலுடன் தொடர்புபடுத்துகின்றது. யாழ்ப்பாணக்குடா நாட்டின் இரண்டாவது பெரிய குளமான கந்தரோடைக்குளம் 39.6 ஏக்கர் பரப்பளவினையுடையது. வழுக்கையாற்றுப் பிரதேசம் குளங்களினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன விவசாயம், மந்தைவளர்ப்பு என்பவற்றிக்கும்;, ஏனைய பண்பாட்டு அம்சங்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது. அண்மைக்காலங்களில் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகளின் மூலம் புராதன காலம் தொட்டு இங்கு செறிவான மக்கள் குடியிருப்புக்கள் இருந்ததற்கான பலவகை மட்பாண்டங்கள், இரும்பு, செம்பு, வெண்கலம் முதலான உலோகங்களினாலான கருவிகள், கலைப்பொருட்கள், பலவகை மணிகள், பல்வேறு காலப்பகுதிக்குரிய நாணயங்கள், பௌத்தமதம் சார்ந்த கட்டிட, சிற்ப அழிபாடுகள், கலைப்பொருட்கள், பௌத்தமதம் சார்ந்த கட்டிட, சிற்ப அழிபாடுகள் என்பவற்றுக்குரிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் 1970களில் விமலா பேக்லேயால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முக்கியம் வாய்ந்ததாகும். பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய மக்கள் விவசாய நடவடிக்கையிலும், மந்தை வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதனை இவ்வாய்வில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகளான நெல்லின் படிமமும், மாட்டின் எலும்பும் உறுதிப்படுத்துகின்றன. (ஏனைய ஆய்வுகள் 1917 -போல் பீரிஸ், 1960 - தொல்லியல் திணைக்களம், 2011 யாழ்ப்பாண பல்கலைக்கழகமும், தொல்லியல் திணைக்களமும் இணைந்து) வரலாற்றுதய காலச்சின்னங்களின் மேற்படையில் வரலாற்றுக்காலச் சின்னங்கள் பெறப்பட்டன. இதில் மூன்றாவது கலாசாரப் படையில் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்களுடன் உரோம மட்கலன்கள், பிராமி

எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள், நாணயங்கள் என்பனவும் நான்காவது கலாசாரப்படையில் பௌத்த அழிபாட்டுச் சின்னங்களும் பெறப்பட்டன. பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய வரலாற்று உதயகால மக்களே வரலாற்றுக்காலத்தையும் வளர்த்தெடுத்தனர் என்பதை இவ்விரு கலாசார சின்னங்களுக்கும் இடையே உள்ள தொடர்ச்சி சுட்டிக்காட்டி நிற்கின்றது. இலங்கையில் அநுராதபுரத்தை அடுத்து முக்கிய பெருங்கற்கால மையமாக கந்தரோடை விளங்குகின்றது. யாழ்ப்பாணக்குடாநாட்டில் பெறப்பட்ட அனைத்துவகை மட்பாண்டங்களும் கந்தரோடையில் கிடைக்கப்பெற்றதாகும். 1980 களில் கலாநிதி இரகுபதி யாழ்ப்பாணக் குடாநாட்டில் 40க்கு மேற்பட்ட இடங்களில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்டு அவற்றின் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடையை குறிப்பிட்டிருந்தார்.

3. மாந்தை : அருவி ஆறு - வட இலங்கையின் மேற்கு பகுதியில் கடற்கரையை அண்டியதாக அருவி ஆற்றின் கழிமுக கரையிலே மன்னார் நகரிலிருந்து வட கிழக்கே ஆறு கி.மீ தூரத்தில் திருக்கேதீஸ்வர ஆலயப் பரப்பில் மாதோட்டம் அமைந்துள்ளது. இலங்கையின் இரண்டாவது பெரிய ஆறான (164 கிலோ மீற்றர் நீளத்தினையுடையது) அருவி ஆற்றின் (மல்வத்து ஓயா) கழிமுகத்திற்கு அண்மையில் மாந்தை காணப்படுவதால் வளமான வண்டல் மண் பகுதியாகவும், ஆற்றினை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசன விவசாயம் மேற்கொள்ளவும் சாதகமாக அமைந்து கொண்டது. புராதன மக்களின் போக்குவரத்து பாதைகளாக நதிகள் அமைந்திருந்தன. மாந்தை, அநுராதபுரம் ஆகிய இரு புராதன நகர மையங்களும் அருவி ஆற்றின் கரையோரமாக அமைந்திருப்பதால் இந்தியாவில் இருந்து இலங்கை வருபவர்கள் மாந்தை நகரை அடைந்து நதிக்கரை வழியாக அநுராதபுரத்தை அடைவது சுலபமாகும். இந்திய அநுராதபுர அரசுகளுக்கிடையிலான போக்குவரத்து மையமாக மாந்தை காணப்பட்டமை நகர, சனத்தொகை பண்பாட்டு வளர்ச்சிக்கும், இரு பாதுகாப்பு அகழிகளும், அரணும் கொண்ட நகரமாகவும் வளர்ச்சி பெறவும் வழிவகுத்தது. மன்னார்க் கரையோரத்திலமைந்த கலாஓயா (இலங்கையின் மூன்றாவது பெரிய ஆறாகும் - 148 கிலோமீற்றர்; நீளம்). நதிக்கரையிலுள்ள பொம்பரிப்பு தாழிக்காட்டு பண்பாட்டம்சங்கள் தமிழகத்தில் தாமிரபரணி நதிக்கரையிலமைந்த மிகப்பெரிய தாழிக்காடான ஆதிச்சநல்லூருக்கு நேர் எதிரே அமைந்திருப்பதும், இவ்விரு பண்பாட்டம்சங்கள் இடையே காணப்படும் நெருங்கிய ஒற்றுமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் முதல் வரலாற்று நூலான மகாவம்சம் புராதன குடியேற்றம், பண்பாட்டு உருவாக்கம் பற்றி குறிப்பிடும் போது, கி.மு 6ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வருகைதந்த விஜயனும், அவனது 700 தோழர்களுடனுமே உருவானது எனக் கூறுகின்றது. எனினும் பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் பண்பாட்டு

உருவாக்கத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இப்;பிரதேசத்தில் மக்கள் குடியேற்றத்துடனான பண்பாட்டு உருவாக்கம் ஏற்பட்டதற்கான சான்றுகள் தொல்லியல் ஆய்வுகளில் கிடைத்து வருகின்றன. மேலும் இலங்கையில் மக்கள் குடியேற்றம், பண்பாட்டு உருவாக்கம் முதலில் உருவான இடமாக தம்பண்ணி குறிப்பிடப்படுகின்றது. இவ்விடத்தினை தீபவம்ச குறிப்புக்களினை அடிப்படையாகக் கொண்டு அறிஞர்கள் மன்னார் மாவட்டத்தின் அருவி ஆற்றின் கழிமுகத்தில் அமைந்திருந்தது என சுட்டிக்காட்டுகின்றனர். கழிமுகக் கரையில் முதலில் தோன்றிய குடியேற்றம் நாளடைவில் அருவியற்றை மையமாகக் கொண்டு உள்நகர்ந்தது எனலாம். ஈழத்தின் மிகத் தொன்மையான பெயராக தம்பபண்ணி, தப்ரபேன் காணப்படுவதால் ஈழத்தின் ஆதிக் குடியேற்றம் தமிழகத்தின் தாம்ரபரணி ஆற்றின் கரையோரத்திலிருந்தே இங்கு பரவியிருக்கலாம் எனக் கொள்ளமுடிகின்றது. மேலும் தமிழகத்திலிருந்து வருகை தந்த விஜயனும், அவனது 700 தோழர்களும் மணமுடிப்பதற்கு வருகை தந்த மணப்பெண்களும், 18 தொழில் தெரிந்த 1000 குடும்பங்களும் வந்திறங்கிய இடமாக மாதித்த துறைமுகம் குறிக்கப்படுகின்றமை, ஈழத்தின் நாகரிக உருவாக்கம் தமிழகத்திலிருந்து ஏற்பட்டதை சுட்டிநிற்கின்றது (புஸ்பரட்ணம், 2017). மாதோட்டத்தின் பண்பாட்டு உருவாக்கம் இடைக்கற்காலப் பண்பாட்டுடன் ஆரம்பமாகின்றது. இங்கு காணப்படும் இடைகற்கால, வரலாற்றுக்கால பண்பாட்டம்சங்கள் மாந்தையினை மிக நீண்ட காலச்சார பராம்பரியத்தினை உடைய பிரதேசமாக எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறானதொரு பண்பாட்டு வளர்ச்சிக்கு மாந்தையின் அமைவிட வாய்ப்புக்களும், அருவி ஆற்றினை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன வளங்களுமே காரணமாக அமைந்தன.

4. கட்டுக்கரை: கட்டுக்கரைக்குளமும், அருவி ஆற்றுத் தொடர்பும் - 2016, 2017 காலப்பகுதிகளில் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறையினர் மத்திய கலாசார நிதியம், தொல்லியல் திணைக்களம் ஆகியோரின் உதவியுடன் கட்டுக்கரைக் குளத்தடியில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகள் மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாக கட்டுக்கரையை எடுத்துக்காட்டியுள்ளன. வட இலங்கையில் மன்னார் மாவட்டத்திலிருந்து வடகிழக்கே 26 கிலோ மீற்றர் தூரத்தில் வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள கட்டுக்கரை தொல்லியல் மையம் குளத்தின் பெயரால் கட்டுக்கரைக்குளம் என்றே பெயர் பெறுகின்றது. மரபுவழிக்கதைகளின் அடிப்படையில் இக்குளம் இயக்கரால் கட்டப்பட்டு, பூதக்குளம் என அழைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது (தணிகாசலம், 1992). பாளி இலக்கியங்களில் அநுராதபுர மன்னனான தாதுசேனனால் (கி.பி 459 - 477) அமைக்கப்பட்டதாக அறியப்படும் யோதவாவியே தமிழில் கட்டுக்கரைக்குளம் எனப் பெயர்பெறுகின்றது. எனினும் இவ்வரலாற்றுக்கு

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டுக்கரை தொன்மையான பண்பாட்டு மையமாக வளர்ந்துள்ளதனை அண்மைக்கால தொல்லியல் ஆய்வு எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான பண்பாட்டு வளர்ச்சிக்கு அதன் அமைவிட சிறப்பே முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இலங்கையின் இரண்டாவது பெரிய குளமான கட்டுக்கரைக்குளமானது அருவி ஆற்றுத் (மல்வத்து ஓயா) தொடர்புடைய குளமாகும். புராதன நகரங்களான மாந்தையும் அநுராதபுரத்தினையும் இணைக்கும் போக்குவரத்து ஊடகமாக அருவி ஆறு விளங்கியது. இத்தொடர்பின் இடைத்தொடர்பு மையமாக கட்டுக்கரை விளங்கியிருந்தமையால் செழிப்பானதொரு பண்பாடு உருவாவதற்கான வசதி, வாய்ப்புக்களை கொண்டிருந்தது. இதனை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சிவன், முருகன், விநாயகர், அகத்தியர், ஐயனார், நாக வழிபாட்டிற்குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள், இரும்பு, கல்மணி, சங்கு, மட்பாண்டம் என்பவற்றை உற்பத்தி செய்யும் சிறுதொழிற்சாலைகள் இருந்தமைக்கான உபகரணங்களும், உற்பத்தி பொருட்களும், பலவகை மட்பாண்டங்கள், நாணயங்கள், மணிவகைகள் போன்ற தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில் உள்ள மிகப்பெரிய பெருங்கற்கால பண்பாட்டு மையமாக கட்டுக்கரை அறியப்படுகின்றது. இலங்கையில் முதன் முதலாக பெருங்கற்கால பண்பாட்டின்; முக்கிய அம்சங்களான குடியிருப்பு, ஈமச்சின்னம், குளங்கள், வயற்பரப்பு ஆகிய நான்கும் ஒரேயிடத்தில் காணப்பட்டதனை கட்டுரைக்கரை தொல்லியல் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது (புஸ்பரட்ணம்,2017).

5. நாகபடுவான் : கானாமோட்டைக் குளம், கடற்கரைப்பகுதி - பூநகரி பிரதேசத்திற்கு அண்மையில் நாகபடுவான் கிராமத்தில் கடற்கரையை அடுத்துள்ள காட்டுப்பகுதியில் கானாமோட்டைக் குளக்கட்டுக்கருகில் புராதன பண்பாட்டு உருவாக்கம் ஒன்று ஏற்பட்டிருந்ததனை தொல்லியல் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. 2017 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வின் போது தாழியின் உடைந்த பாகங்கள், பல வகையான மட்பாண்டங்கள், இரும்பு உருக்கப்பட்டதன் எச்சங்கள், அதிக எண்ணிக்கையிலான சுடுமண் சிலைகள், சிற்பங்கள், நாகவழிபாட்டு எச்சங்கள் என்பன கண்டுபிடித்தமை கானாமோட்டைக் குளத்தினை மையப்படுத்தி புராதன பண்பாட்டு உருவாக்கம் ஏற்பட்டதனை சுட்டிநிற்கின்றது.

6. பூநகரி : கடற்கரைப்பகுதி, மாந்தைக்கு அண்மையிலான அமைவு - மாந்தைதொட்டு பூநகரிப் பிராந்தியத்திலுள்ள கல்முனை வரை ஆதிக்குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள் காணப்பட்டிருக்கமென்பதினை அண்மையில் பூநகரிப் பிராந்தியத்தில் மண்ணித்தலை, பரமன்கிராய், வெட்டுக்காடு போன்ற இடங்களில் கிடைத்துள்ள பெருங்கற்கால

பண்பாட்டம்சங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களால் 1990 - 2004 வரையான காலப்பகுதியில் கல்முனை தொட்டு மாதோட்டத்திற்கு தெற்கே வீரபாண்டியன் முனைவரையுள்ள பூநகரிப் பிராந்தியத்தின் கடற்கரை சார்ந்த பிரதேசத்தில் மேற்கொண்ட தொல்லியல்; ஆய்வுகளில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரியதான பெருமளவு சான்றுகள் கிடைக்கப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

7. ஆனைக்கோட்டை: சிப்பித்தறை வாய்க்கால், வழுக்கையாறு ஒன்றுகலக்கும் இடம் (நவாலியூடாக கல்லுண்டாயில் கடலுடன் கலக்கின்றது.)- இவ் பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய தொல்லியல் மையம் யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஆறு மைல் தொலைவில் நாவாந்துறை கடற்பகுதிக்கு அண்மையில், வழுக்கையாறு ஒன்றுகலக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் 1980இல் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்விலே நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட இரு ஈமச்சின்னங்கள் இனங்காணப்பட்டன. இவ்ஈமச்சின்னங்களின் படையல் பொருட்களுடன் எருதின் எலும்புகளும், கொம்புகளும், பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய ஏனைய சான்றுகளும் கிடைக்கப்பெற்றிருந்தன. யாழ்ப்பாணத்தின் முதலாவது பெருங்கற்கால ஈமச்சின்னம் இதுவாகும். இச்சான்றுகளில் அதி முக்கியத்துவம் வாய்ந்தது "கோவேத" என பெயர் பொறிக்கப்பட்ட முத்திரை மோதிரமாகும்.

8. மாமடுவ : பறங்கியாறு - பறங்கியாற்றினை மையப்படுத்தி தோற்றம் பெற்ற பண்பாட்டு உருவாக்கமென்று வவுனியா மாவட்டத்தின் மாமடுவவில் தோற்றம் பெற்றிருந்ததனை இங்கு கிடைக்கப்பெற்ற கற்கிடை, கல் வட்ட ஈமச்சின்னங்களும், மட்பாண்டங்களும் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாதாரங்கள் இவ்விடத்தினை தொன்மையான பெருங்கற்கால மையமாக எடுத்துக் காட்டுகின்றது (இந்திரபாலா, 2005). பறங்கி ஆறு வடமேற்;கு கரையில் மன்னாருக்கு வடக்கே கடலோடு இணைகின்றது. தமிழ்நாட்டிலிருந்து பரவிய பண்பாட்டுச் செல்வாக்குகள் ஆறுகள் வழியாக உள்ளே பரவியதை இலங்கையின் வேறு இடங்களில் காண்பதைப் போல் இங்கும் காணமுடிகின்றது. பறங்கியாறு வழியாக வவுனியா மாவட்டத்துக்குள் பெருங்கற்கால பண்பாடுகள் பரவலடைந்தன. இச்செல்வாக்குகள் கிழக்கில் பாயும் மாஓய, யான் ஓயா வழியாகவும் வவுனியா மாவட்டத்துக்குள் பரவியிருந்தது.

9. குஞ்சுப்பரந்தன் : கிளிநொச்சி ஆறு , குளங்கள் - கிளிநொச்சி மாவட்டத்தில் குஞ்சுப்பரந்தனில் 1990 அளவில் பயிர்ச்செய்கைக்காக நிலத்தை பண்படுத்தும் போது எதிர்பாராத வகையில் முழுமையான தாழியும், தாழியின் உடைந்த பாகங்களும் கிடைக்கப்பெற்றன. வட இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது முழுமையான பெருங்கற்கால ஈமத்தாழி என்ற வகையில் இதற்;கு தனிச்சிறப்புண்டு.

நான்கடி உயரமும், எட்டடி சுற்றுவட்டமும் வெளிப்புறத்தில் சில அலங்கார கோடுகளும் கொண்ட இத் தாழியின் விளிம்பு ஓரங்குலத் தடிப்புடையது. தாழிக்குள் மனித எலும்புக் கூட்டின் சில பாகங்களும், சாம்பல் போன்ற கரிய பொருட்களும் இரு மட்கலம் என்பன காணப்படுகின்றன. இச்சான்றுகள் இப்பிரதேசத்தில் குளநீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட பெருங்கற்காலப் பண்பாடு சிறப்புற்றதனை எடுத்துக்காட்டுகின்றது.

*10.* சாட்டி : கடற்கரை பிரதேசமும், சுடுமண் கிணறு - இத்தொல்லியல் மையம் யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப்பிரதேச கடற்கரைப்பகுதியில் அமைந்துள்ளது. *2005* ஆம் ஆண்டு யாழ்ப்;பாண பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் *30*க்கு மேற்பட்ட இடங்களில் பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இருந்தமைக்கான சான்றுகளும், பெருங்கற்கால பண்பாட்டிற்குரியதான பலவகையான எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் சுடுமண் கிணறு முக்கியமானதாகும். வட இலங்கையில் பண்பாட்டு உருவாக்கத்தில் நிலக்கீழ் நீரினை பெறுவதற்காக அமைக்கப்பட்ட கிணறுகள் முக்கியமானவையாகும். நிலக்கீழ் நன்னீரினை பெற்று தமது வாழ்வாதார தேவைகளை நிறைவேற்றுக் கொள்வது மணற்பாங்கான கடற்கரைப் பிரதேசங்களில் இலகுவில் சாத்தியமாகியது. இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக சாட்டி வரலாற்றுதயகால பண்பாட்டு மையத்தினைக் குறிப்பிடலாம்.

பெருங்கற்கால பண்பாட்டில் மக்கள் இருப்பிடங்கள், இடுகாடுகள், குளங்கள், வயல்கள் என்பன முக்கிய நான்கு அம்சங்களாகும். இன்றும் கிராமிய குடியிருப்புக்களில் இத்தகைய கூறுகள் இணைந்து காணப்படுவதனை அவதானிக்கமுடிகின்றது. இலங்கையின் பொருளாதார ஆக்கத்திலும் இக்கூறுகளே அடிப்படையாலீக விளங்கியிருந்தன என்பதனை வயல்களும், குளங்களும் இணைந்துள்ள பெருங்கற்கால மையங்களின் பண்பாட்டுச் சான்றுகள் புலப்படுத்துகின்றன. இப்பண்பாட்டு மக்கள் ஓரிடத்தில் நிரந்தரமாக வாழ முற்பட்ட வேளையில் விவசாய, அன்றாட தேவைகளுக்கு இயற்கையாக கிடைத்த நீர் போதுமானதாக இருக்கவில்லை. இதனால் குடியிருப்புக்களுக்கு அண்மையில் செயற்கையான குளங்களை அமைத்தும் தமது மேலதிக நீர்த்தேவைகளை நிறைவேற்றிக்கொண்டனர். இதன் காரணமாகவே பெருங்கற்கால பண்பாட்டின் முக்கிய கருவூலமாக குளங்கள் விளங்கியிருந்தன. இவ்வாறாக இயற்கையான, செயற்கையான நீர்நிலைகளை அடிப்படையாகக் கொண்ட பெருங்கற்காலப் பண்பாடு வட இலங்கையின் பண்பாட்டு ஆக்கத்திற்;கும், அதன் தொடர்ச்சியான வளர்சிக்கும் காரணமாக அமைந்தது. பெருங்கற்கால ஈமச்சின்னங்களுக்கும், குளத்திற்கும் இடையிலான தொடர்பு பிற்கால

ஆலயத்திற்கும், கேணிக்கும் இடையிலான தொடர்பாக ஒப்பிட்டு நோக்கப்படுகின்றது (கோபாலகிருஸ்ன ஐயர், 1981). சுதர்சன் செவியரட்ன குளத்தை மையப்படுத்திய கிராமியக் குடியிருப்புக்களின் தோற்றத்தை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புபடுத்துகின்றார். இதனை பெருங்கற்கால மையங்களை அண்டி கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும், பாளி இலக்கிய கருத்துக்களும் உறுதிசெய்கின்றன. அவற்றில் வரும் இடப்பெயர்கள் குளத்தைப் பின்னொட்டாக கொண்டவை. உதாரணமாக குளம (ம்), வாவி, மடு, வில், பளை, சாலை, வாளி, மோட்டை, படுவம் போன்ற சொற்களினை குறிப்பிடலாம். வட இலங்கையில் இவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சி நிலையினை தற்காலத்தில் நீர் நிலைகளை அண்டிய கிராமிய குடியிருப்புக்கள் குளம், மடு, கேணி, வில், அளை என நீர்நிலைகளின் சிறப்பு பெயரினை பின்னொட்டுச் சொல்லாக கொண்டு அழைக்கப்படுவதனை காணமுடிகின்றது. சில உதாரணங்களாக செட்டிக்குளம், மாங்குளம், தச்சன்குளம், மருதங்கேணி, மாங்கேணி, கணுக்கேணி, மிருசுவில், கெருடாவில், மந்துவில், கும்பளை போன்றவற்றைக் குறிப்பிடலாம். ழிஜ.பி.லூயிஸினால் 1895இல் எழுதப்பட்ட ஆயஸீரெயட ழூக ஏயஸீஸீவீ னுளைவசவீஉவள என்ற நூலில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் “குளம்”; என்ற நீர்நிலைசார்ந்த சொல்லினை பின்னொட்டாக கொண்டு 300க்கு மேற்பட்ட ஊர்களின் பெயர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (ழிஜ.பி.லூயிஸ், 1895). வட இலங்கை முழுவதையும் உள்ளடக்கிய வகையில் முறையான தொல்லியலாய்வுகள் இதுவரை இடம்பெறவில்லை. எதிர்காலங்களில் முழுமையான தொல்லியல் ஆய்வுகள் இடம்பெறுமானால் கட்டுக்கரை, நாகபடுவான் (2017) போன்று குளத்தினை மையப்படுத்திய புராதன குடியிருப்பு மையங்கள் மேலும் கண்டறியப்படலாம்.

இன்று வட இலங்கை யாழ்ப்பாணம் மற்றும் அயலில் உள்ள தீவுகள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கி, 8835.02 (ஸங மஅ) சதுர கிலோ மீற்றர் பரப்பளவினை உடைய பிரதேசமாக காணப்படுகின்றது. இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 13.46 சதவீதமாகும். இங்கு நாய் ஆறு: (வவுனியா, முல்லைத்தீவு), பறங்கி ஆறு, சிப்பி ஆறு, பாலி ஆறு, பல்லவராயன்கட்டு ஆறு, மண்டகல் ஆறு, அக்கராயன் ஆறு, களவளப்பு ஆறு, கனகராயன் ஆறு, நெதிலி ஆறு, பிரமந்தல் ஆறு, தேரவில் ஆறு, மருதபிலி ஆறு, பேர் ஆறு, கோடலிக்கல்லு ஆறு, பலடி ஆறு, சூரியன் ஆறு, சவர் ஆறு, வழுக்கை ஆறு என 20 இற்கு மேற்பட்ட ஆறுகள் காணப்பட்ட போதிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் காணப்படும் பெரிய, நடுத்தர ஆறுகளுடன் ஒப்பிடுகையில் வட இலங்கையின் ஆறுகள் அளவில் சிறியனவே. அவை குளங்களுக்கு நீரை இட்டுச் செல்பனவாகவும்,

மழைக்கால வடிகாலமைப்புக்களுடன் தொடர்புள்ளவையுமாகும். வட இலங்கையின் குளத்தினைப் பொறுத்தவரையில் கிளிநொச்சியில் ஒன்பது பெரிய குளங்களும் 457 சிறிய குளங்களும், மன்னாரில் 07 பெரிய குளங்களும், 348 சிறிய குளங்களும், முல்லைத்தீவில் 20 பெரிய குளங்களும், 250 சிறிய குளங்களும், வவுனியாவில் 17 பெரிய குளங்களும், 689 சிறிய குளங்களும், யாழ்ப்பாணத்தில் 1000 சிறிய குளங்களுமாக எல்லாமாக 2797 குளங்கள் காணப்படுகின்றன (Statistical Information 2017, Northern Provincial Council, ஜே.பி.லூயிஸ், 1895).

பெருங்கற்கால பண்பாட்டுடன் அறிமுகமாகிய குளநீர்ப்பாசன விவசாயம் அப்பண்பாட்டு மையங்களின் ஆறுகள், குளங்கள், கால்வாய்களினை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டதோடு நிரந்தரப்பொருளாதாரம், நிலையான குடியிருப்புக்கள் ஏற்படவும் காரணமாகியது. நிரந்தரப்பொருளாதாரம் ஈட்டித்தந்த மிகை உற்பத்தி பண்டமாற்றுப் பொருளாதார முறைமைக்கும் உள்நாட்டு வர்த்தகத்திற்;கும் காலப்போக்கில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கும் வழிவகுத்தது. இவ் வெளிநாட்டு வர்த்தகம் முதிர்ச்சி நிலையில் நகரமயமாக்கத்தினை உருவாக்கியிருந்தது. நிரந்தரப் பொருளாதாரத்தினால் ஏற்பட்ட ஓய்வுநேரம் கலைகளின் உருவாக்கத்திற்கும், சிறுதொழினுட்ப வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. பெருங்கற்கால பண்பாட்டில் அறிமுகமாகிய இரும்பின் பாவனை ஆறு, குளங்களை அடிப்படையாகக் கொண்ட நீர்ப்பாசன விவசாயத்திற்கு மேலும் உத்வேகத்தையளித்திருந்தது. அதாவது நிலத்தைப் பண்படுத்தி விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும், குளங்கள், கால்வாய்களை அமைக்கவும் பலவகையான இரும்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. பெருங்கற்கால ஈமச்சின்னங்கள், குளங்கள், கால்வாய்கள் அமைப்பதிலும், குறிப்பிட்ட மையங்களில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி பெறுவதிலும் பலதரப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வாய்ப்பளித்தமை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் நகரமயமாக்கம், அரச உருவாக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தன. இவ்வாறாக வட இலங்கையின் அரச உருவாக்கம், நகரமயமாக்கம், சமூக உருவாக்கம், இந்து சமயத்தின் தொன்மை, இந்து சமய நம்பிக்கைகளின் உருவாக்கம், எழுத்தின் உருவாக்கம் போன்றவற்றின் வரலாற்றினை பின்னோக்கிப் பார்த்தல் அவற்றின் தொடக்கமாக பெருங்கற்காலப்பண்பாடே காணப்படுகின்றது. இதனாலேயே பெருங்கற்காலப் பண்பாடானது வட இலங்கையின் பண்பாட்டு ஆக்ககாலமாக பார்க்கப்படுகின்றது. இப்பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் உருவாகிய அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாசார வளர்ச்சி நிலைகள் வரலாற்றுக்காலம் தோற்றம் பெறவும் அடிப்படையாக அமைந்து கொண்டது.

1. Ragupathy, P., 1987, Early Setttlement in Jaffna an Archaeological Survey, Medras.
2. இந்திரபாலா, க, *2006*, இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. புஸ்பரட்ணம், ப., *2017*, இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு, உமா பதிப்பகம் மலேசியா.
4. புஸ்பரட்ணம், ப., *1993*, "பூநகரித் தொல்பொருளாய்வு", யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
5. தணிகாசலம், க., *1992*, தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும், சரவணா பதிப்பகம், சென்னை.
6. சிற்றம்பலம், சி.க., *1993*, யாழ்ப்பாணத் தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
7. கோபாலகிருஸ்ண ஐயர், ப., *1981*, சிவாகமங்களும் சிற்ப நூல்களும் சித்தரிக்கும் சிவ விக்கிரவியல், கலாநிதி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சமர்பிக்கப்பட்ட ஆய்வேடு.
8. லூயிஸ், ஜே.பி, *1895 (மறு 2012)*, இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு, சேமமடு பதிப்பகம்.